1970 ஆகஸ்ட் 26]

எல்லாம் பஸ்களுடைய கண்காணிப்பு சரியாக இல்லை என்பது தான் பொருள். டிரைவர்களாக அவர்கள் வருவதற்கு டெஸ்ட்கள் வைத்து அவர்கள் வேலைக்கு எடுக்கப்படுவார்களா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: டிரைவர்கள் தகுதி, பயிற்சி எல்லாவற்றின் அடிப்படையில்தான் வேலைக்கு அமர்த்தப்படுகிறார்கள்.

ஜேடர்பாளையத்தருகில் வாய்க்கால் வெட்டுதல்.

* 51 **வினா.—திரு. ஆர். கருப்பையா:** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஜேடர்பாளையத்தருகில் வாய்க்கால் வெட்டி, திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள பெரம்பலூர், ஜெயங்கொண்டம், அரியலூர் வட்டங்களுக்கு பாசன வசதிச் செய்துக் கொடுக்கும் உத்தேசம் அரசின் பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: ஆம் பரிசீலிக்கப் பட்டு அதிக செலவு ஆவதாலும் பயன் மிகவும் குறைவாக இருப்ப தாலும் இத்திட்டம் கைவிடப்பட்டது.

திரு. ஆர். கருப்பையா: தலைவரவர்களே, இந்த ஜேடர்பாளையத் தருகில் வாய்க்கால் வெட்டினால் பெரம்பலூர், ஜயம்கொண்டம், அரியலூர் பகுதிகளுக்குப் பயன்படும். ஆகையால் அந்தப் பகுதி யில் அரசாங்கச் செலவில் சமுதாயக் கிணறுகள் வெட்டி பாசனம் செய்து தருமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இந்தக் கேள்வியை விவசாயத்துறை அமைச்சரைக் கேட்கவும்.

பொறியாளர்களுக்கும், மேற்பார்வையாளர்களுக்கும் வீட்டு வசதி.

* 52 **வினா—புலவர் பொ. பொன்னம்பலம்:** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொதுப்பணித்துறையிலே பணியாற்றும் பொறியாளர் களுக்கும், மேற்பார்வையாளர்களுக்கும், வீடு கட்டிக்கொடுக்கும் திட்டம் அரசின் பரிசீலனையிலுள்ளதா?

(இ) ஆமெனில், எப்பொழுது நடைமுறைக்கு வரும்?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:

(அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

புலவர். பொ. பொன்னம்பலம்: பேரவைத் தலைவரவர்களே, வட்ட அளவில் பணியாற்றும் பொறியாளர்களுக்கும், மேற்பார்வை யாளர்களுக்கும், கிராமப்புறங்களில் வீட்டு வசதி கிடைக்காத